1993 பிப்ரவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளில் பணியாற்றுகிற துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடுக் கட்டிக் கொடுக்கும் அந்தத் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படாவிட்டாலும், அந்த நகராட்சிகளுக்குச் சொந்தமான இடங்களில், அவர்களுக்கு இடமாவது கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு தமிழக அரசின் சார்பிலே திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, நிறைவேற்ற இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி தனியாக இடங்களை ஒதுக்கிக் கொடுத்தால், அதன் செலவை ஏற்று கட்டிக் கொள்வதற்கு அவர்களிடத்திலே பொருளாதார நிலைமை இல்லாத காரணத்தினால், அரசே முன்வந்து அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தைத்தயாரித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசாங்கம் வீடு கட்டவே தயாராக இருக்கிறது என்கிறபோது, உறுப்பினர், இடமாவது கொடுங்கள் என்பதாகக் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து வினா எண் 13 டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

13—

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்கு உணவு அட்டை மூலம் மண்ணெண்ணெய் வழங்கல்.

*9141—டாக்டர் மு. அம்மமுத்துப்பிள்ளை : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1700 மீனவர்கள் மண்ணெண்ணெயினால் இயங்கும் கட்டுமர வெளிப்பொருத்து இயந்திரம் (Out Board Motor) பொருத்துவதால் உரிய நேரத்தில் மண்ணெண்ணெய் கிடைக்காமல் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதால் இவர்களுக்கு உணவு அட்டை மூலம் ரேஷன் கடையில் மண்ணெண்ணெய் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

[1993 பிப்ரவரி 8

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மீனவர்களின் கட்டுமரங்களில் பொருத்தப்பட்டுள்ள வெளிப்பொருத்து இயந்ரங்களுக்குப் (Out Board Motors) பயன்படுத்த மண்ணெண்ணெய் வேண்டும் என விண்ணப்பித்தவர்களுக்கு மீன்வளத்துறை உதவி இயக்குநர் பரிந்துரையின் அடிப்படையில், பொது விநியோகத் திட்ட விலையில் மண்ணெண்ணெய் வழங்கப் பட்டு வருகிறது. இவர்களுக்கு உணவு அட்டைகள் மூலம் மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம் முக்கடலும் சூழ்ந்துள்ள ஒரு பகுதி. அங்கு மீனவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். விவசாயத்திற்கு அடுத்தபடியாக மீன்பிடித் தொழில்தான் அங்கு முக்கியத் தொழிலாக இருக்கிறது. தற்போது மீனவர்கள் கட்டுமரத்திலிருந்து படிப்படியாக மாறி, அவுட்-போர்ட் என்ஜின் வைத்து தொழில் செய்கிறார்கள். அதற்கு வேண்டிய மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. மற்றும் அது அதிகமாகத் தேவைப்படுவதால், வெளிச்சந்தையிலிருந்து வாங்க வேண்டியிருக்கிறது. எனவே, அந்தத் தொழிலைச் சீரமைக்க அரசு கருணைகூர்ந்து, உணவு அட்டை மூலம் மண்ணெண்ணெய் வழங்க மறு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்த மாவட்டத்தில் 94 பேர் மட்டுமே விண்ணப்பித்து அவர்களுக்கு மண்ணெண்ணெயை நாம் வழங்கி வருகிறோம். இதற்குமுன் செய்யாத சாதனையை — இதற்கு முன்பெல்லாம் மீனவர்களுக்கு 'இண்டஸ்ட்ரியல் ரேட்'டிலேதான் மண்ணெண்ணெய் வழங்கப் பட்டது. ஆனால், நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அதை மாற்றி செப்டம்பர் 1992-லேயிருந்து, 'இண்டஸ்ட்டிரியல் ரேட்'-ஆக இருக்கிற ரூ. 6.15-லிருந்து மாற்றி, ரூ. 2.75-க்கு அவர்களுக்கு வழங்கிக்கொண்டிருக் கிறோம் இன்னும் யார் யாருக்குத் தேவையோ அவர்கள் முறையாக விண்ணப்பிப்பார்களேயானால், அவர்களுக்கும் அவ்வாறு எண்ணெய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

1993 பிப்ரவரி 8]

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டக் கேள்விக்கிணங்க, அதாவது மீன்துறை இலாகாவிலிருந்து அவர்களுக்கு மண்ணெண்ணெய் கிடைப்பதில்லை. ஆகையால்தான் 'ரேஷன் கார்டு' மூலமாக இல்லையென்றாலும், அவர்களுக்கு எத்தனை 'போட்' இருக்கிறது என்பதைப் பார்த்து, அமைச்சர் சொல்லும்போது 94 'போட்'களுக்கு என்று சொன்னார்; உண்மையிலேயே 1,700 அல்ல; 2,000-க்கும் மேற்பட்ட 'போட்'டுகள் அங்கே இருக்கின்றன. எல்லா போட்டுகளுக்கும் இந்த அளவுக்கு குறிப்பாக இவ்வளவு மண்ணெண்ணெய் கொடுப்போம் என்று சொல்கிறபடி, தனி அட்டை — 'ரேஷன் கார்டு' மூலமாக இல்லாவிட்டாலும்கூட — தனி அட்டை மூலமாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அவர்களுக்கு என்று தனியாக 'பெர்மிட்' மூலம் வழங்கிக் கொண்டு வருகிறோம். பலபேர் அங்கே இருக்கிறார்கள். ஆயிரக் கணக்கில் என்றாலும், அவர்கள் இதுவரை விண்ணப்பிக்கவில்லை. மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள், முயற்சி எடுத்து விண்ணப்பம் போடுவார்களேயானால், நிச்சயமாக அனைவருக்கும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 14, திரு ஜி. பழனிசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

14—

தனியார் தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு மையங்களில் வேலை வாய்ப்பு அளித்தல்.

*13313—திரு. ஜி. பழனிசாமி:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தனியார் தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு மையங்களில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

53—435—5